வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 30.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா, சீர்திருத்த எக்ஸ்பிரஸ் விரைவு வண்டியில் ஏறி, உலக நாடுகளின் கவன ஈர்ப்பு மையமாக மேம்பட்டு உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- விக்சித் பாரத் – ஜி ராம் ஜி திட்டம், ஊரக வேலை உத்தரவாதம் தொடர்பான நடப்புத் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப் பட்டுள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.
- குடியரசுத் துணைத தலைவர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன், இன்று ராமேஸ்வரத்தில், 4ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமத்தின் நிறைவு விழாவில் கலந்து கொண்டார்.
- புதுச்சேரியில், நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களை அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்கும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

---------------------------

<u>மோடி கட்டுரை (14)</u>

இந்தியா, சீர்திருத்த எக்ஸ்பிரஸ் விரைவு வண்டியில் ஏறி, உலக நாடுகளின் கவன மையமாக மேம்பட்டு உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். நிர்வாகத் தடைகளை முற்றிலுமாக நீக்கும் வகையில், 2025ஆம் ஆண்டில், அரசு மேற்கொண்ட கூட்டு முயற்சிகள் குறித்த, ரிஃபார்ம் எக்ஸ்பிரஸ் – 2025 என்னும் கட்டுரையைப் பகிர்ந்து கொண்டு, இன்று, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். இந்தியாவின் இளைய தலைமுறையும், இந்தியர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை உணர்வுமே, சீர்திருத்த

எக்ஸ்பிரஸ் விரைவு வண்டியின் உந்து சக்தி எஞ்சின் என்று, அவர் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் சட்டங்கள் முதல், சந்தை சீர்திருத்தம் வரை, நாட்டின் வளர்ச்சி தொடர்பான எல்லா முடிவுகளும், முற்றிலும் நம்பிக்கை, மற்றும், நீடித்த ஸ்திரத் தன்மையின் அடிப்படையில்தான் மேற்கொள்ளப் படுவதாக, பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

---------------------------

<u>*மோடி ஆலோசனை* (10)</u>

வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, புதுடெல்லி நிதி ஆயோக் அலுவலகத்தில், புகழ்பெற்ற பொருளாதார வல்லுனர்கள், மற்றும், துறை வாரியான நிபுணர்களுடன், கலந்துரையாடினார். நாட்டின் நடப்புப் பொருளாதார நிலவரங்கள், மற்றும், எதிர்கால முன்னுரிமைகள் குறித்து, நிபுணர்கள் தங்களின் கருத்துக்களை பிரதமருடன் பகிர்ந்து கொண்டனர்.

---------------------------

<u>*ஷிவ்ராஜ் 1* (6)</u>

மத்திய அரசின் விக்சித் பாரத் – ஜி ராம் ஜி திட்டம், ஊரக வேலை உத்தரவாதம் தொடர்பான நடப்புத் தேவைகளை கருத்தில் கொண்டும், முந்தைய திட்டத்தின் குறைகளை களையும் வகையிலும், உருவாக்கப் பட்டுள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். இன்று போபாலில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ஷிவ்ராஜ் 2 (15)

(வாய்ஸ்)

ஊரக வேலை உத்தரவாதம் தொடர்பான, ஜி ராம் ஜி திட்டம், பிரதமரின் கதி சக்தி இயக்கத்துடன் இணைக்கப்பட்டு, மேலும் திறம்பட்ட திட்டமாக மாற்றப் பட்டுள்ளதாக அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்தார். இத்திட்டத்திற்கு, தேவையான நிதி கிடைப்பதை, சட்டரீதியில் அரசு உறுதிப்படுத்தி இருப்பதாகவும், வேலை வழங்கப்படாத நாட்களுக்கு, வேலையின்மைப் படி வழங்க, சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். வேலை உத்தரவாதத் திட்டத்தின் பெயர் மாற்றப்பட்டதை எதிர்கட்சிகள் எதிர்ப்பது குறித்து, அமைச்சர் பேசுகையில், தற்போதைய எதிர்கட்சிகள், முன்பு ஆட்சியில் இருந்த சமயத்திலும், வேலை வாய்ப்பு தொடர்பான திட்டங்களின் பெயர், பலமுறை மாற்றப் பட்டுள்ளதாக கூறினார். ஜி ராம் ஜி மசோதா மீது, மக்களவையில் 8 மணி நேரம் விரிவான விவாதங்கள் இடம்பெற்ற போதிலும், எதிர்கட்சி எம்.பிக்கள், தமது பதிலை கேளாமல் அமளியில் ஈடுபட்டதாக அவர் குறிப்பிட்டார். மக்களவை எதிர்கட்சித் தலைவர், விவாதங்களின் போது அவையில் இருக்கவில்லை என்று, அமைச்சர் மேலும் கூறினார்.

---------------------------

ஹெலிகாப்டர் (11)

ராணுவம் அல்லாத சிவில் பயன்பாட்டிற்காக, ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப் பட்டுள்ள, துருவ்-என்ஜி ஹெலிகாப்டரின் முதலாவது பயணத்தை, இன்று பெங்களூரில், மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு, கொடியசைத்து தொடக்கி வைத்தார். HAL நிறுவனம், சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் அடியெடுத்து வைப்பது, முக்கிய மைல் கல்லாக கருதத் தக்க தருணம் என்றும், இத்துறையில் சுயசார்பை மேம்படுத்த, துருவ்

– என்ஜி ஹெலிகாப்டர், மிகவும் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். இத்தகைய ஹெலிகாப்டர்களை வாங்க, பவன் ஹன்ஸ் நிறுவனமும், கர்நாடக அரசு, மற்றும், எல்லைப் பாதுகாப்புப் படையும், ஆர்வம் வெளிப்படுத்தி இருப்பதாக, அமைச்சர் தெரிவித்தார்.

---------------------------

*முர்மு விழா* (9)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று, ஜார்கண்ட் மாநிலம் கும்லா மாவட்டத்தில், கார்த்திக் ஜாத்ரா என்னும், மாநிலங்களுக்கு இடையிலான கலாச்சார மக்கள் சந்திப்பு திருவிழாவின் நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். பழங்குடி மக்களின் வாழ்வை மேம்படுத்த, பாபா கார்த்திக் ஓரான் மேற்கொண்ட முயற்சிகளை அவர் நினைவு கூர்ந்து பாராட்டினார். கார்த்திக் ஓரான் பெயரில், பழங்குடி மாணவர்களுக்கென, தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய தனிப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கக் கோரி வரும் அமைப்பு சார்பில், இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

---------------------------

*பீம் செயலி* (6)

டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைக்கான மத்திய அரசின் பீம் செயலி அறிமுகம் செய்யப்பட்டு, இன்றுடன் 9 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இவ்வாண்டில் மட்டும் கடந்த 28ஆம் தேதி வரை, பீம் செயலி மூலம் மொத்தம் 64 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான, 663 மில்லியன் பரிவர்த்தனைகள், மேற்கொள்ளப் பட்டுள்ளதாக, தேசிய பணப் பட்டுவாடாக் கழகம் தெரிவித்துள்ளது.

---------------------------

*ராதாகிருஷ்ணன் (13)*

குடியரசுத் துணைத தலைவர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன், இன்று மாலை ராமேஸ்வரத்தில், 4ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமத்தின் நிறைவு விழாவில் கலந்து கொண்டார். தமிழ், மிகவும் மேன்மையான மொழி என்று, அவர் தமது உரையில் கூறினார். தமிழ் மொழியின் சிறப்பை பிரதமர் திரு. நரேந்திர மோடி உலகம் முழுவதும் பரப்பி வருவதாக அவர் தெரிவித்தார். மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி உள்ளிட்டோர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

முன்னதாக, இன்று கேரள மாநிலம் வர்க்கலாவில், 93ஆவது சிவகிரி புனித யாத்திரையின் தொடக்க விழாவிலும், திருவனந்தபுரத்தில், மார் யுவானியோஸ் தன்னாட்சிக் கல்லூரியின் பவள விழா கொண்டாட்டங்களின் நிறைவு விழாவிலும், குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

---------------------------

*ஆண்டு இறுதி-கலாச்சாரம் 1 (6)*

நாளையுடன் முடிவடையும் 2025-ஆம் ஆண்டு, இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கிய அத்தியாயமாக அமைந்துள்ளது. அரசின் சீர்திருத்தக் கொள்கைகள், முன்னேற்றமாகவும் முக்கிய தாக்கங்களாகவும் மாறியதை இவ்வாண்டில் நாம் கண்டோம். இன்று, சீர்திருத்தங்களின் ஆண்டு என்னும் இந்த சிறப்பு தொடரில், இவ்வாண்டு கலாச்சாரத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து ஒரு தொகுப்பு.....

(வாய்ஸ்)

*ஆண்டு இறுதி-கலாச்சாரம் 2 (19)*

(வாய்ஸ்)

2025ஆம் ஆண்டில், இந்தியாவின் கலாச்சார மறுமலர்ச்சி, புதுப்பிக்கப்பட்ட பண்பாட்டு நம்பிக்கையுடன், உறுதியான முறையில், நாட்டின் பிரதான நீரோட்டத்துடன் இணைந்துள்ளது. குறிப்பாக, நாட்டின் ஆன்மீக-கலாச்சார சூழலின் ஓர் முக்கிய தருணமாக, அயோத்தியின், ஸ்ரீராம ஜென்ம பூமி கோவில், கட்டி முடிக்கப் பட்டது. உலக அளவில் இந்தியாவின் கலாச்சாரத் தாக்கம், இவ்வாண்டு, சர்வதேச அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்டது. தீபங்களின் திருநாளாம் தீபாவளி, தொட்டறிய முடியாத யுனெஸ்கோ மரபுப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மராட்டியர் ஆட்சியின் போது, மஹாராஷ்ட்ரா மற்றும் தமிழகத்தில் கட்டப்பட்ட கோட்டைகள், யுனெஸ்கோ மரபுச் சின்னங்கள் பட்டியலில் இடம்பெற்றன. இவ்வாண்டு, பிரயாக்ராஜ் மஹா கும்பமேளா மற்றும், வந்தே மாதரம் தேச பக்திப் பாடலின் 150ஆம் ஆண்டு விழாவில், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்றனர். சர்தார வல்லபாய் பட்டேலின் 150ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா, மற்றும், டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் 125ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவையும், நாடு சிறப்பான முறையில் கொண்டாடி, நாட்டிற்கே அடித்தளம் அமைத்துக் கொடுத்த தலைவர்களை போற்றியது. இது எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கையில், 2025ஆம் ஆண்டில் இந்தியாவின் கலாச்சார நம்பிக்கை, தெளிவான, நிலையான, கூட்டு வெளிப்படாக மாறி இருப்பதை, நன்கு புரிந்து கொள்ளலாம்.

---------------------------

ரங்கசாமி (11)

புதுச்சேரியில், மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதில், அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும், நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களை அமைக்க, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். குடிமைப் பொருள் வழங்கல் துறை சார்பில், காமராஜர் மணிமண்டபத்தில் இன்று நடைபெற்ற, தேசிய நுகர்வோர் தினவிழாவில் அவர் பேசுகையில், மாநில நுகர்வோர் ஆணையத்திற்கான கட்டிடம் சரி செய்யப் பட்டுள்ளதாகவும், வரும் தை மாதத்தில் இக்கட்டிடம் திறக்கப்படும் என்றும் கூறினார். மாநில நுகர்வோர் ஆணையத்தின் தலைவர் திரு. சுந்தர வடிவேலு, மாவட்ட ஆணையத்தின் தலைவர் திரு. முத்துவேல், நுகர்வோர் ஆணைய உறுப்பினர்கள், துறை அதிகாரிகள், மற்றும், நுகர்வோர் அமைப்புகளின் நிர்வாகிகள், இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

---------------------------

அன்பழகன்- போலி மருந்து (7)

புதுச்சேரியில், மாநில அஇஅதிமுக செயலர் திரு. அன்பழகன் தலைமையில், இன்று அக்கட்சியினர், புஸ்சி வீதியில் உள்ள மருந்து கடைகள் முன்பாக, ஆர்பாட்டத்தில் ஈடுபட்டு, போலி மருந்து விற்பனைக்கு எதிராக கோஷமிட்டதால் பரபரப்பு நிலவியது. போலி மருந்து விவகாரம் தொடர்பாக, புதுச்சேரியில், 26 பேர் கைது செய்யப்பட்டு, 13 குடோன்களுக்கு சீல் வைக்கப் பட்டுள்ள நிலையில், இந்த முற்றுகை போராட்டம் மேற்கொள்ளப் பட்டது.

---------------------------

வானிலை (13)

வளிமண்டல மேலடுக்கு, மற்றும், கீழடுக்கு சுழற்சிகள் காரணமாக, இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஜனவரி 2ஆம் தேதி வரை, ஒருசில இடங்களில், மழை இருக்கலாம் என்றும், இரவு அல்லது அதிகாலை வேளையில், லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக கன்னியாகுமரியில், 32.2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. சமவெளிப் பகுதிகளை பொருத்தவரை, திருத்தணியில், 17.5 டிகிரி செல்சியஸ், மற்றும், மலைப் பகுதிகளை பொருத்தவரை, உதகமண்டலத்தில், 7.2 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

---------------------------

மகளிர் கிரிக்கெட் (5)

மகளிர் கிரிக்கெட்டில், இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையிலான, 5ஆவது மற்றும் இறுதி 20 ஓவர் போட்டி, திருவனந்தபுரத்தில், இன்று மாலை நடைபெற உள்ளது. இத்தொடரில் இதுவரை முடிவடைந்த அனைத்து 4 போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்று, அசைக்க முடியாத முன்னிலையில் உள்ளது.

---------------------------

குடியரசு என்சிசி (14)

2026ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில், 28 மாநிலங்கள், மற்றும், 8 யூனியன் பிரதேசங்களில் இருந்து, 2 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட என்சிசி மாணவர்கள் பங்கேற்க உள்ளனர். இது, இதுவரை இல்லாத உயர் அளவாகும் என, பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், 25 நட்பு நாடுகளில் இருந்து, மாணவர் படையினர், மற்றும், அதிகாரிகளும், குடியரசு தின விழாவில் பங்கேற்க உள்ளனர். இதற்கிடையே, குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்கும் என்சிசி மாணவர்களுக்கான சிறப்பு முகாம், புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. என்சிசி தலைமை இயக்குநர் லெப்டினென்ட் ஜெனரல் வீரேந்திர வத்ஸ், தொடக்க விழாவில் பேசுகையில், அப்பழுக்கற்ற நேர்மை, சுயநலமற்ற சேவை, மற்றும் தோழமை உணர்வை, என்சிசி மாணவர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்றும், மொழி, சாதி, மத பேதங்களை தாண்டி, நாட்டிற்கே முதலிடம் என்னும் உணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

---------------------------